பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

ஏழாம் திருமொழி - தங்கையை மூக்கும்
தேவப்ரயாகை என்று வழங்கும் கண்டம் என்னும் திருப்பதியின் பெருமை

** தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
தடிந்த * எம் தாசரதி போய் *
எங்கும் தன் புகழா இருந்து அரசாண்ட *
எம் புருடோத்தமன் இருக்கை **
கங்கை கங்கை என்ற வாசகத்தாலே *
கடுவினை களைந்திடகிற்கும் *
கங்கையின் கரை மேல் கை தொழ நின்ற *
கண்டம் என்னும் கடிநகரே 1

சலம் பொதி உடம்பின் தழல் உமிழ் பேழ் வாய்ச் *
சந்திரன் வெங்கதிர் அஞ்ச *
மலர்ந்தெழுந்து அணவு மணிவண்ண உருவின் *
மால் புருடோத்தமன் வாழ்வு **
நலம் திகழ் சடையான் முடிக் கொன்றை மலரும் *
நாரணன் பாதத் துழாயும் *
கலந்திழி புனலால் புகர்படு கங்கைக் *
கண்டம் என்னும் கடிநகரே 2

அதிர்முகம் உடைய வலம்புரி குமிழ்த்தி *
அழல் உமிழ் ஆழி கொண்டெறிந்து * அங்
கெதிர்முக அசுரர் தலைகளை இடறும் *
எம் புருடோத்தமன் இருக்கை **
சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் *
சங்கரன் சடையினில் தங்கி *
கதிர்முக மணி கொண்டிழி புனல் கங்கைக் *
கண்டம் என்னும் கடிநகரே 3

இமையவர் இறுமாந்திருந்து அரசாள *
ஏற்று வந்தெதிர் பொரு சேனை *
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும் *
நம் புருடோத்தமன் நகர் தான் **
இமவந்தம் தொடங்கி இருங்கடல் அளவும் *
இருகரை உலகிரைத்தாட *
கமையுடைப் பெருமைக் கங்கையின் கரை மேல் *
கண்டம் என்னும் கடிநகரே 4

உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும் *
ஒண்சுடர் ஆழியும் சங்கும் *
மழுவொடு வாளும் படைக்கலம் உடைய *
மால் புருடோத்தமன் வாழ்வு **
எழுமையும் கூடி ஈண்டிய பாவம் *
இறைப் பொழுதளவினில் எல்லாம் *
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரை மேல் *
கண்டம் என்னும் கடிநகரே 5

தலைப்பெய்து குமுறிச் சலம் பொதி மேகம் *
சலசல பொழிந்திடக் கண்டு *
மலைப் பெருங்குடையால் மறுத்தவன் மதுரை *
மால் புருடோத்தமன் வாழ்வு **
அலைப்புடைத் திரைவாய் அருந்தவமுனிவர் *
அவபிரதம் குடைந்தாட *
கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரை மேல் *
கண்டம் என்னும் கடிநகரே 6

விற்பிடித்திறுத்து வேழத்தை முறுக்கி *
மேல் இருந்தவன் தலை சாடி *
மற்பொருதெழப் பாய்ந்து அரையனை உதைத்த *
மால் புருடோத்தமன் வாழ்வு **
அற்புதம் உடைய அயிராவத மதமும் *
அவர் இளம்படியர் ஒண்சாந்தும் *
கற்பக மலரும் கலந்திழி கங்கைக் *
கண்டம் என்னும் கடிநகரே 7

திரைபொரு கடல் சூழ் திண்மதிள் துவரை *
வேந்து தன் மைத்துனன்மார்க்காய் *
அரசினை அவிய அரசினை அருளும் *
அரி புருடோத்தமன் அமர்வு **
நிரை நிரையாக நெடியன யூபம் *
நிரந்தரம் ஒழுக்கு விட்டு * இரண்டு
கரை புரை வேள்விப் புகை கமழ் கங்கைக் *
கண்டம் என்னும் கடிநகரே 8

** வடதிசை மதுரை சாளக்கிராமம் *
வைகுந்தம் துவரை அயோத்தி *
இடமுடை வதரி இடவகை உடைய *
எம் புருடோத்தமன் இருக்கை **
தடவரை அதிரத் தரணி விண்டிடியத் *
தலைப் பற்றிக் கரை மரம் சாடி *
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் *
கண்டம் என்னும் கடிநகரே 9

** மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் *
மூன்றெழுத்தாக்கி * மூன்றெழுத்தை
ஏன்று கொண்டிருப்பார்க்கு இரக்கம் நன்குடைய *
எம் புருடோத்தமன் இருக்கை **
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி *
மூன்றினில் மூன்றுருவானான் *
கான் தடம் பொழில் சூழ் கங்கையின் கரை மேல் *
கண்டம் என்னும் கடிநகரே 10

** பொங்கொலி கங்கைக் கரை மலி கண்டத்து *
உறை புருடோத்தமன் அடி மேல் *
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க் கோன் *
விட்டுசித்தன் விருப்புற்று **
தங்கிய அன்பால் செய் தமிழ் மாலை *
தங்கிய நாவுடையார்க்கு *
கங்கையில் திருமால் கழலிணைக் கீழே *
குளித்திருந்த கணக்காமே 11

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்